
மினி
லயன்
ஜூனியர் & மினி லயன்
இணைந்த 2 in 1 இதழ் !
ரூ.
2.50



தென் அமெரிக்காவில்
மாயாவி
'மறையும் மாயாவி' என்று பிரசால் புகழப் பட்ட ரிப்போர்ட்டர் ஜாக்கும் மிஸ் ஹேலன் மோரனும் தென் அமெரிக்காவிலுள்ள அமேஸோனி பகுதியை வந்தடைந்தனர்- விமானத்தில்! அங்கு நிலவிய உத்த வெப்ப நிலையும் சுகாதாரமற்ற சுற்றுச் சூழலும் ஜாக்கை முகத்தை சுளிக்க வைத்தது...!
ADUANA
ஜாக் ஒரு ஆராய்ச்சியாளர். தற்செயலாக, மாயமாய் மறைந்து விடும் சக்தியைக் கொடுக்கக் கூடிய மாத்திரைகளை அவர் கண்டு பிடித்தார்-! தொடர்ந்து தனது மறையும் சக்தியைப் பயன்படுத்தி, சமூக விரோதிகளைத் தோற்கடிக்கும் முயற்சியில் இறங்கினார். அவரின் இந்தப் பணிக்கு, பத்திரிக்கையாளர் என்ற வேஷம் ரொம்பப் பொருந்தியதால் பத்திரிக்கையாளராகவே செயல்பட்டு வந்தார்.


சில நிமிடங்களுக்குப்பின், காவல்துறை அலுவலகத்தில் கிடைத்த வரவேற்பும் வெறுப்பூட்டுவதாக இருந்தது ..
ம்ம்... பிரஞ்ச் உல்லாச பயணிகளா?


ஓகோ... பத்திரிக்கை ரிப்போர்ட்டரா! உங்களுக்கு இங்கே என்ன வேலை?


மிஸ் ஹேலன் மோரன்! மோரன்.? இந்தப்பெயரை சமீபத்தில்எங்கோ கேள்விப்பட்டதுபோல்தோன்று கிறதே!
நான்கு மாதங்களுக்கு முன் இந்த நகரில் மர்மமான முறை யில் காணமற்போன பிரபல ஆராய்ச்சியாளர் ரிச்சர்ட் மோரனின்சகோதரி நான்...!


உண்மையில் அவருக்கு என்னதான் நேர்ந்ததுஎன்று விசாரித்துதெரிந்து கொள்ள வந்திருக்கிறேன்! என் சகோதரரை உங்களுக்கு தெரியுமா? அவர் இறந்து விட்டார் என்ற வதந்தி உண்மையா?
அவரைப்பற்றி எனக்கு எது வும் தெரியாது... ஆனால் சம்பந்தப்பட்ட செய்திகளை நிறைய கேட்டுக்கேட்டு சலித்துவிட்டது எனக்கு! இங்குள்ள செவ்விந்தியர்கள் அவரைபலிகொண்டிருக்கலாம்


அந்த காவல்துறை அதிகாரியிடமிருந்து ஒருவழியாக கழற்றிக்கொண்டு வெளியே வந்தார்கள்.
என்ன அலட்சியம்... பார்த்தீர்களா?
தொலைகிறான் விடு...!
முதலில் உனக்கு ஓய்வு தேவை ஹெலன்...!
என் முயற்சியில் உங்களுக்குக் கூட நம்பிக்கை கிடையாது... நான் இங்கே வந்திருக்கவே வேண்டியதில்லை என்று நினைக்கிறீர்கள் — இல்லையா...
உண்மையில் ரிச்சர்ட் இறந்து விட்டதாகவே ஜாக்கும் நம்பினார்.
மேலதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி ஹெலனுக்கு துணையாக இங்கே வந்திருந்தார்...


எஸ்டோடா நகரம் சோம்பிக் களையிழந்து கிடந்தது
EL CONCHO


ஹோட்டல் அறையில் சாமான்களை போட்டுவிட்டு உடனே வெளியே போகத்துடித்தாள் ஹெலன்...
சிறிய நகர்ம்·வந்த வேலை சுலபமாக இருக்கும்!
அந்த புகைப்படத்தை எடு...!


ரிச்சர்ட் இறந்த செய்தி கிடைத்த நாலைந்து தினங்களுக்குப் பின் இந்தப்படம் பிரான்ஸி லிருந்து உனக்கு அனுப்பப்பட்டிருக்கிறது ...
பின் பக்கத்தில் எஸ்டேடா என்று தெளிவாக முத்திரை இருக்கிறது ஆனால் ஏனோ இந்த நகரின் காவல் துறையினர் எதுவுமே தெரியாது என்று மழுப்புகின்றனர்!


எந்த ஸ்டுடியோவில் எடுக்கப் பட்ட படம் என்று முதலில் கண்டறிய முயறசிப்போம்!


நகரின் பல பகுதிகளையும் சல்லடை போட்டுச் சலித்து அலுத்துவிட்டபோது—
அதோ... பாருங்கள்!
ஆமாம்— அது ஒரு ஸ்டுடியோதான்!


ஸ்டுடியோவை அவர்கள் நெருங்கியபோது—
வாருங்கள் ஸார்... வாருங்கள் மேடம்!
புகைப் படத்தில் பின்னணியில் தெரியும் அதே ஆசாமி!


இந்தப் படத்தில் இருக்கும் நபரை உங்களுக்குத் தெரியுமா?
இல்...லை— நான் பார்த்ததே இல்லை!
பொய்.! பின்னணியில் தெரிவது-நீங்கள் தானே?
இல்லை— அ.. அது.. நா..னி...ல்லை!
ஏனிந்த பதற்றம்? எதையோ மறைக்கிறான்!
ஸாரி மேடம்- எனக்கும் இந்த புகைப்படத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது...
10


கடைக்காரன் வெல வெலத்துப் போய் தடுமாறிக்கொண்டிருந் தான்...
தைரியமாக நிஜத்தை சொல்லுங்கள்...
ஆ!


உள்ளே நுழைந்த செவ்விந்திய இளைஞன் ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினான்
ஹலோ
அதைக்கொடு... இப்படி!



இந்தாருங்கள்...
ஜாக்..! இந்தத்தாளில் இருப்பது ரிச்சர்டின் கையெழுத்து!
ம்ம்ம்...!
அதைப் பிடுங்க முயன்று தோற்றுப் போனான் லோலன்...
நமக்கேன் வம்பு என்பதுபோல் செவ்விந்திய இளைஞன் ஓட்டம் பிடித்தான்...
எதுவுமே தெரியாது என்று பொய்தானே சொன்னாய்— அந்தகடிதத்தை கொடு... என்னிடம்!


துரத்திக்கொண்டு ஓடினார் ஜாக்—
நில்!ஒரே ஒரு தகவலை மட்டும் சொல்லி விட்டுப் போ!


அங்கே— கூட்டம் கூடிவிட்டது...
முறைக்கின்றார்கள்..!


தனக்கு பக்கபலமாக ஆட்கள் சேர்ந்து விட்ட தைரியத்தில், ஹேலனை பிடித்து வெளியே தள்ளினான் கடைக்காரன்...
மறுபடியும் இங்கேவந்து கலாட்டா பண்ணினீர்களோ-தெரியும் சேதி!
விடு.. கையை!
ஹேலனை அழைத்துக்கொண்டு நகர்ந்தார் ஜாக்
அது.. ரிச்சர்ட்டின் கையெழுத்தேதான் சந்தேகமேயில்லை!
முதலில் ஹோட்டலுக்குச் செல்வோம்.. வா!
காவல்துறை அதிகாரி பெரசோடு மறுநாள் காலை ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்து கொண்டார் ஜாக்!
மிச்சத்தைக் காலையில் பார்த்துக் கொள்ளலாம்— போய் நிம்மதியாக தூங்கு... இப்போது!



நடு இரவில் ஏதோசப்தம்கேட்டு விழித்துக் கொண்டார் ஜாக்...
ஜன்னலை யார் திறந்தது...?
க்ரீக்!
நிழலோட்டமாகஓர் உருவம் தெரிந்தது
யார்... அங்கே?
துள்ளி எழுந்தார் ஜாக்...
அட.. இவன் டாக்ஸி டிரைவரல்லவா?


சிறு ஓசையுடன் ஜன்னல் மீண்டும் சாத்திக் கொண்டது..
அவன் எதற்காக இங்கே வந்தி ருப்பான்?.. எதை எடுத்துச் செல்ல?
ஸ்டுடியோ எதிரே குழுமிய கூட்டத்தில் இவனும் இருந்த தாக ஞாபகம்!
திடுக்கிட்டுப்போனார் ஜாக்...
இந்தத் துப்பாக்கி-? இதை இங்கே விட்டுச்செல்லவே அவன் வந்திருக்கிறான்?


என்னை ஏதோ ஒரு விவகாரத்தில் மாட்டிவைக்க இது ஒரு சூழ்ச்சி போலும்!
வெளியே போலீஸ் சைரன் ஒலி கேட்டது..
ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த ஜாக் திடுக்கிட்டார்..
போலீஸ்- இங்கே.. இந்த நேரத்தில்..?
சப்தம் கேட்டு விழித்துக்கொண்ட ஹெலன் உள்ளே வந்தாள்...
என்ன.. என்ன ஸார் நடந்தது?
ஹெலன்! — ஆபத்து!



துப்பாக்கியை ஒரு துணியில் வைத்து சுருட்டி ஹேலனிடம் கொடுத்தார் ஜாக்..
இதைக்கொண்டு போய் உன் அறையில் ஒளித்து வை... சீக்கிரம்!
மறுநிமிடமே தடதடவென்று உள்ளே ஓடிவந்தது போலீஸ்..
உங்களை கைது செய்கிறேன்
என்ன?
காரணம்?
சற்றுத் தொலைவில் ஒரு செவ்விந்தியன் கொலை செய்யப்பட்டு கிடக்கிறான்... உங்களுக்கும் அவனுக்கும் தகராறு என்று தகவல்!


சரி... இந்த அறையை சோதனை போடுங்கள்-


நேராகச்சென்று துப்பாக்கி இருந்த மேஜை டிராயரை இழுத்துப்பார்த்த ஒரு கான்ஸ்டபிளின் முகத்தில் ஏமாற்றம்..!
காணவில்லையே.. ஸார்!


என்ன — இல்லையா? அதெப்படி..!
நீங்களே வந்து பாருங்களேன்!
ஹா.. பேலஸ்!
எவ்வளவு தேடியும் அறையில் ஒன்றும் அகப்படவில்லை..! கோபத்தோடு உறுமினர் காவல்துறை அதிகாரி—
அவர்கள் வெளியேறிய பின்—
உங்களை நாளை விசாரித்துக் கொள்கிறேன். அதுவரை நீங்கள் வெளியே எங்கேயும் போகக்கூடாது!
அப்பாடா.. இம்முறை எப்படியோ சூழ்ச்சியில் மாட்டிக் கொள்ளாமல் தப்பி விட்டோம்


என் அறையையும் சோதனை போட்டிருந்தார்கள் என்றால் எக்கச்சக்கமாக மாட்டி கொண்டிருப்போம். உங்கள்மீது கொலைக் குற்றம் சுமத்த நினைக்கிறான் பெரஸ்.
உன் அண்ணன் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் இவன் ஏதாவது பொய் அறிக்கை கொடுத்திருப்பான். இடைஞ்சலாக நாம் முளைத்திருக்கிறோம்...- எரிச்சல்படுகிறான்!
இம்முறை தப்பிவிட்டோம் நாளை வேறுகதை ஜோடிப் ! பான்!
வந்த இடத்தில் இது என்ன புதுத்தொல்லை?


உடனடியாக மேலதிகாரிகளோடு தொடர்பு கொள்வோம்! ஆனால ஹோட்டல் போனில பேசுவது உசிதமல்ல!
ஸ்டுடியோவில் ஒரு போன் இருந்ததாக ஞாபகம்!
ஸ்டுடியோவுக்கு செல்லத் தீர்மானித்தார் ஜாக்.
நம்மை கண்காணிக்க டாக்ஸி டிரைவராக வந்த சி.ஐ.டி. நபர் தெருமுனையில் நிற்கிறான்
அவன் கண்ணில் படாமல் நழுவ முயன்றார் ஜாக்..
கஷ்டமான காரியம்தான்..


மறைந்து செல்ல எந்த வசதியும் இல்லை!
அப்போது--
அட இந்த செவ்விந்தியன் எங்கிருந்து வந்து முளைத்தான்?
சி ஐ.டி. ஆசாமிமீது கண்ணாக, பதுங்கிப் பதுங்கி நெருங்கினான் அந்தச் செவ்விந்தியன்
கையில் கத்தி..!


செவ்விந்தியன் சட்டென அந்த ஆன்மீது பாய்ந்தான். ஆனால் எதிரி சுதாரித்துக் கொண்டுவிட்டான்..
செவ்விந்தியனை சுலபமாக வீழ்த்திவிட்டான் அந்த முரடன்..
கொன்றுவிட முயற்சிக்கிறானே?
சட்டென்று அங்கே பாய்ந்தோடினார் ஜாக்
கண்ணிமைக்கும் பொழுதில் முரடனை அடித்து வீழ்த்தி விட்டார்..


நீங்களா---
உஷ்! பயப்படாதே
அஹம்..! அந்தப்பெண் ஸ்டுடியோ—
இந்த கபரை நீ ஏன் தாக்கினாய்...? பெரஸ்என்மீதுஎப்படியாவது கொலைக் குற்றம் சுமத்தி என்னை உள்ளே தள்ள துடிக்கிறான்.


நிம்மதிப் பெருமூச்சு விட்டான் அந்த இளைஞன்
என் பெயர் லூக்.. அவன் பெயர் மாஜோ- என தம்பியை கொன்று விட்டான்! ஸ்டுடியோவில்நீங்கள் என தம்பியைபார்த்திருக்கிறீர்கள்!
ஓகோ... புரிகிறது!
பழிதீர்க்க வந்தாயாக்கும்! பெரஸ் உத்தரவுப்படிதான் மாஜோ உன் தம்பியை கொலை செய்திருக்க வேண்டும் அதுசரி- உனக்கு ஆராய்ச்சியாளர் ரிச்சர்டை தெரியுமா?
தெரியும்..! அவர் இருக்குமிடத்திற்கு உங்களை நான் அழைத்துச் செல்கிறேன்
ஹேலனும் நம்மோடு வருவான்! சரிதானே?


மறுநாள் ஆற்றுவழியே கட்டுமரத்தின் மீது அமர்ந்து பயணத்தை மேற்கொண்டனர்..
அலுப்பான பல மணி நேர பயணத்திற்குப் பின்—
நாம் கரையேறவேண்டிய இடம் இதுதான்.
இந்த செவ்விந்தியனை நம்புகிறீர்களா?
வேறு வழி! எஸ்டோடா நகரைவிட இங்கே நமக்கு ஆபத்து குறைவுதான்!


அங்கே காவல்துறையினர் ஏனோ நம்மை எதிரிகளாக கருதுகின்றனர்...
இந்த வழியாக நடந்தால் லோகோஸ்போய் சேரலாம். வாருங்கள்...!
நேர் பாதை அங்கே இருக்க இதை ஏன் தேர்ந்தெடுத்தான்?
இவன்மீது எனக்கு ஏனோ சந்தேகமாகவே இருக்கிறது!



சறுத் தொலைவு நடந்த பின்—
ம்ம்—பாதை தவறி விட்டது...
என்ன சொல்கிருய் நீ?
பதிலேதும் சொல்லாமல் பாய்ந்தோடி மறைந்து விட்டான் செவ்விந்தியன்...
ஜாக்—எனக்கு பயமாக இருக்கிறது
நடுக்காட்டில் இப்படி தவிக்க விட்டு ஓடிப்போய்விட்டானே!
ஐயோ...நாம் இவனை நம்பி வந்ததே தப்பு!


இறங்கு... இனி பாதை அவ்வளவுமோசமில்லை!
மீண்டும் நடக்கலாயினர்...


அந்த கிராமம் ரொம்பவும் ப்திராக காட்சியளித்தது...
யாரையும் காணோமே!
தடக்.. தடக்.. என்று அடித்துக்கொள்கிறது என் மனம்!


அப்போது... ஒரு குடிசையிலிருந்து வெளிப்பட்டார் ஒரு நபர்-
ரிச்சர்ட்!
நிஜமாகவே நீதானா . ரிச்சர்ட்! நீ செத்துவிட்டதாக கதை கட்டிவிட்டார்கள்..பாவிகள்!
எப்படி நீ இங்கே வந்து சேர்ந்தாய் ஹேலன்?
நீங்கள் இறந்து விட்டதாகத்தான் நான் சென்ற நிமிடம் வரை நம்பிக் கொண்டிருந்தேன்!
இவர் என் நண்பர்- ஜாக்!.. பத்திரிக்கையாளர்:


தன் சோகக் கதையை சுருக்கமாக எடுத்துரைத்தார் ரிச்சர்ட்—
பெரஸுக்கு இங்கே ஒரு பெரிய தகர தொழிற்சாலை இருக்கிறது. அதை நிர்வகிக்க திறமையான ஒரு ஆள் தேவைப்பட்டது. என் மீது ஒரு கொலைக் குற்றத்தை சுமத்தி பயமுறுத்தி இங்கே மடக்கிப் போட்டு விட்டான்...!


இங்கே இருக்கும் ஜனங்களையும் அவன் அடிமைகளாக நடத்துகிறான். சற்றுமுன் எல்லோரும் எங்கோ ஓடிப்போய்விட்டார்கள்
அப்படியா... ஏன்?


உங்களை பின்தொடர்ந்து போலீஸ் இங்கே வரும் என்பது அவர்களுடைய யூகம்.
ஆனால்... நாங்கள் இங்கே வந்திருப்பது போலீஸாருக்கு தெரியாதே.


அந்த ஹூக் போலீஸாரின் ஆள்! நாம் உடனே இடத்தைகாலி செய்துவிட வேண்டும். நான் ஒரு கட்டுமரத்தை மறைத்துவைத்திருக்கிறேன். இந்த நரகத்திலிருந்து தப்பிக்க இதுநாள்வரை எனக்கு சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை - பக்கபலமும் இல்லை அத்தோடு காலில்வேறு காயம்!


அடுத்த சில நிமிடங்களில் அவர்கள் அங்கிருந்து கிளம்பிவிட்டனர்
அந்த தொழிற்சாலையை நோட்டம்விட எனக்கு ஆவலாக இருக்கிறது!
வேண்டாம்— ஆபத்தாகிவிடக்கூடும்!


தொழிற்சாலையை நெருங்கி விட்டோம் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!


இதுதான் நாம் செல்ல வேண்டிய பாதை


ஒருவழியாக கட்டுமரம் கண்டுபிடிக்கப் பட்டது...
ஜாக்- எச்சரிக்கை! இப்பகுதியில் பிரான்ஹா மீன்கள் அதிகம்— சதையை கடித்து குதறிவிடும்!
கேள்விப்பட்டிருக்கிறேன்!
35


ரிச்சர்ட் எச்சரித்தது சரியே!... ஏகப்பட்ட மீன்கள் அங்கே பாய்ந்தோடி வந்தன!
திடீரென்று—
ஜாக்கிரதை!
சட்டென்று ஹேலனை வாரித் தள்ளினார் ரிச்சர்ட்...
அது ஏனென்று தெரியாமல் ஒருகணம் திகைத்தார் ஜாக்


ஏகப்பட்ட ஈட்டிகளும் அம்புகளும் அவர்களை குறிவைத்து வந்து விழுந்தன...


ஜாக் தப்பித்துக்கொண்டது அவருடைய அதிர்ஷ்டம்என்றுதான் சொல்லவேண்டும்...
எதிரிகள் யார்—எங்கே பதுங்கியிருக்கிறார்கள் என்றுதெரிந்தால் நல்லது...


ஒருகணம் அங்கே பூரண அமைதி.
நிலவியது—
ஆவ்... அங்கே—சுழல்...!
காற்றின்வேகத்தால் கட்டுமரம் தன்
போக்கில் விரையலாயிற்று


கட்டு மரத்தை கவிழ்க்க முயற்சிக்கும் சுழல்
நீரினுள் விழுந்தால் கடித்துத் தின்ன காத்தி
ருக்கும் பிரான்ஹா மீன்கள்...மறைந்திருந்து
ஆயுதங்களை எறியும் எதிரிகள்—சே...என்ன
இக்கட்டான நிலை!


கட்டுமரம் சுழலை நெருங்கிவிட்ட போது—
ஜாக்...!
ஈட்டியில் கயிற்றைக் கட்டி கட்டுமரத்தை நோக்கி வீசினான் ஜாக்...!
குறி-கச்சிதம்!..பலே!


ஹூக் கட்டுமரத்தை கரையின் பக்கமாக இழுத்தான்.
ஈட்டிகளும் அம்புகளும் தொடர்ந்து வந்துகொண்டிருந்தன...


ஹூக், நடுக்காட்டில் எங்களை தவிக்கவிட்டு ஓடிவிட்டாயே—இப் பொழுது திடீரென ஏது மனமாற்றம்?
அந்தப் பெரஸ் எவ்வளவு பெரிய அயோக்கியன் என்று எனக்கு இப்பொழுதுதான் தெரிந்தது. உங்கள் மீதுபழிசுமத்துவதற்காகஎன் சகோதரனைக் கொலை செய்ததே அவன்தான் என்று எனக்குத் தெரிந்தது. என்னை மன்னித்து விடுங்கள்!


தேடுகிறார்கள்...
அதோ...பெரஸாம் ஜெமோக்களும்!
ஜெமோக்கள்—அந்தக் காட்டில் வசிக்கும் அடிமைப் பழங்குடியினர்—
அவர்கள் நம்மைக் கண்டுபிடித்து விட்டால் ஆபத்தாகிவிடும்— வாருங்கள் ஓடிப்போய் விடலாம்




தொடர்ச்சி 102-ம் பக்கம்...

...42-ம் பக்கத் தொடர்ச்சி-







தன்னுடைய வாட்ச் ஸ்ட்ராப்பில் ஒளித்து வைத்திருந்த சின்னஞ்சிறு மாத்திரைகளை வெளியில் எடுத்த ஜாக்தான் ஒன்றை விழுங்கியதோடு லூக்குக்கும் ஒன்று கொடுத்தார்
என்ன... அற்புதம்— மாயமாக மறைந்து விட்டோமே!
பேசாதே.. ஜெமோக்கள் நெருங்கிவிட்டனர்..


இருவரையும் காணாமல் எதிரிகள் திகைத்து தடுமாறினர்..
எங்கே போயிருப்பார்கள்? திடீரென்று காணாமல் போய்விட்டார்களே!
ஆச்சரியமாக இருக்கிறது!


ரிச்சர்ட்டும், பெரஸ்லாம்கூட்டு
லோகோஸவாசிகளை தொழிற்
சாலையினுள் கொத்தடிமை
களாக நடத்துகிறார்கள்.
நதியைநோக்கி இருவரும் அச்ச
மின்றி நடந்தனர்.
ஹேலனை எப்படியாவது நம்மோடு
அழைத்துச்சென்றுவிடவேண்டும்
முடிந்தால் கொத்தடிமைகளாக
அல்லலுறும் லோகோஸ்வாசிகளை
யும் விடுவிக்க வேண்டும்.


இருவரும் தொழிற்சாலை இருந்த திசையில் நடக்கத் தொடங்கினர்...
அதைப்பார்த்தால் தொழிற்சாலையாகதெரியவில்லை..பழையதொரு கோட்டை மாதிரி அல்லவா தோன்றுகிறது!
தகர தொழிற்சாலை என்பதெல்லாம் பொய்- உண்மையில் இங்கே வைரத்தை தோண்டி எடுக்கும்முயற்சி நடக்கிறது... அந்த வேலைக்குத்தான் லோகோஸ்வாசிகள்!


இன்னும் சற்று நெருங்கியபோது—
அதோ..பெரலின் ஹெலிகாப்டர்..
நமக்கு பயன்படக் கூடும்!


அவனை கட்டுத் தள்ளுங்கள்- பிரச்சனைகள் ஒட்டுமொத்த மாக ஒரு முடிவுக்குவந்து விடும்!
உஷ்ஷ்.. வாயை மூடு-நம் உருவம் பிறர் கணணுக்கு புலப்படாவிடினும் நாம் எழுப்பும் ஓசைகள்கேட்கும்


ஜாக் பயந்தமாதிரியே, பேச்சுக்குரல் கேட்டு திடுக்கிட்டபெரஸ் கட பத்தனித்தான்..
விலகி ஓடிவிடலாம்!
ஹேய்-அங்கே என்ன சத்தம்?


ஹேலனை எப்படியாவது தேடிக்கண்டு பிடிக்க வேண்டும்!
அந்த ஊரக் பயல் நம்காலை வாரிவிட்டான்!


பழிதீர்த்துக்கொள்ளத்தான் அவனுடைய சகோதரனை நீங்கள் தீர்த்துக்கட்டி விட்டீர்களே!
காட்டுக்குள்ளே வெகுதூரம் சென்றிருக்க முடியாது தேடிப் பிடித்து இவனையும் தீர்த்துக் கட்டிவிட்டால்தான் நமக்கு நிம்மதி!
விடாமுயற்சியாக தேடியலைந்து ஒருவழியாக ஹெலனின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்தார் ஜாக :
அதோ இருக்கிறான்!



அருகே சென்றார் ஜாக் .. காலடியோசை கேட்டுத் திடுக்கிட்டாள் ஹேலன்
பயப்படாதே... ஜாக்தான் வந்திருக்கிறேன் மாயாவியாக! இங்கேயே இரு- சீக்கிரமே திரும்ப வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன்!
இது என்ன மேஜிக்?
அப்புறம் சொல்கிறேன் விபரமாக! தைரியமாக இரு நான் வருகிறேன்!
ஜாக் வெளியே காத்துக் கொண்டிருந்தான் ...
என்ன ஆயிற்று- நீ போன காரியம்?
சந்தேகம் என்ன வெற்றிதான்!
நடந்ததை விபரமாக எடுத்துரைத்தான் ஜாக்


முதலில் தொழிற்சாலை காவலாளியை தாக்கி வீழ்த்தினேன்...


உள்ளே - என் கூட்டத்தினர்... அடுத்து என்ன விபரீதம் நிகழுமோ என்று அஞ்சி பரிதாபமாக உட்கார்ந்து கொண்டிருந்தனர்


நாகா...!
நடந்ததை விவரித்தான்
உங்களுடைய எச்சரிக்கையை மீறி ஓர் உறவினரிடம் இரகசியத்தை சொல்ல விழைந்தேன்..ஆனால்என்னை ஆவியோ என்று நினைத்து விட்டனர்!
இதற்கிடையே—
என்ன... அலோசோ— தூக்கமா?
இல்லை—யாரோ அடித்துப் போட்டிருக்கிறார்கள்!


காவலாளியை வீழ்த்திய பின்னர் அடுத்த நடவடிக்கையில் இறங்கத் தீர்மானித்தனர்-
முதலில் ஹெலிகாப்டர் அருகே உள்ள காவலர்களை கவனிப் போம்... வா.


நிம்மதியாக சீட்டு ஆடிக் கொண் டிருந்த சிப்பாய்களுக்கு புரிந்து கொள்ள முடியாத அதிர்ச்சி—
நன்றாகத் தூங்குங்கள் பசங்களா!
ணங்
கும்!


இன்னும் ஒருவன் பாக்கி-
ஹா.. ஹா..
ஏன் சிரிக்கிறாய்.. ஹெர்பர்ட்?


முதலில் ஹெலிகாப்டரை கவனிப் போம்.. நம்மை ஏற்றிக்கொள்ளா மல் அது கிளம்பிவிடக்கூடாது!
இதோ...வெடி மருந்துப் பெட்டி!


தொழிற்சாலையை தரைமட்டமாக்கி விட உதவும்!
உயிர்ப்பலியை தவிர்ப்பது நல்லது!
DINAMITA


பொருத்தமான இடத்தை தேடிக் கண்டுபிடித்தனர்...
முதலில் சிறிய அளவில் வெடிச் சப்தத்தை எழுப்புவோம்.. அனைவரும் தொழிற்சாலையை விட்டு வெளியேறி விடுவார்கள்- பிறகு முழு அளவில் வெடி வைப்போம்!


வெடியோசை கேட்டு அனைவரும் பரபரப்படைந்தனர்...
தாக்குகிறார்கள்...!
யார்...?
எங்கே இருக்கிறார்கள்?
எல்லோரும் வெளியேறிய பின் முழு மூச்சில் தாக்குதலை தொடங்கினார்கள்
ஏதோ பில்லி சூனிய வேலை என்று நினைப்பார்கள்...
எல்லோரும் சிதறியோடினர்...
டமடமார்


டமால்!
டமால்
போர்க்களம்போல் காட்சியளித்தது அந்த இடம்


டமால்
இனியும் இங்கே இருந்தால் மரணம் நிச்சயம் வாருங்கள் ஓடிப்போய் விடலாம்—


ஹேய்... நில்லுங்கள் இல்லையேல் சுட்டு விடுவேன்
வேண்டாம்!


சே... துப்பாக்கியும் துரோகம் செய்கிறதே!
கிளிக் க்ளாக்
17


தப்பியோடும் தொழிலாளிகளை காவலாளிகள் தடுத்து நிறுத்த முயன்றால் சுடயோசிக்காதே!
அதற்கு அவசியமே இல்லை காவலாளிகளும் சேர்ந்து கொண்டு ஓடுகிறார்கள்!


ஹேலனை மீட்க வேண்டும்!


நல்லவேளை-, அவள் இன்
னமும் உள்ளேதான் இருக்கிறாள்
கூச்சல் போடாதே—ஜாக்தான்வந்திருக்
கிறேன் ஹெலிகாப்டரில் நாம் தப்பிச்
சென்று விடலாம்!
ஆனால்...
திடீரென்று கதை மாறியது
சே... இப்படியும் ஒரு பச்சைத்
துரோகமா?
ரிச்சர்ட் ஓடிவர—ஜாக்
அகப்பட்டுக்கொண்டார்.:
என்னிடம்?


இரத்த பாசம் தம்பி-ஹேலனுக்கு அண்ணன் வேண்டும்.. அவன் வசமுள்ள வைரங்கள் வேண்டும்!
தப்பிவிடலாம் என்று கனவு காணாதீர்கள்!


ஏன் கூடாது? நானும் ஹேலனும் ஜாலியாக ஹெலிகாப்டரில் கிளம்பப் போகிறோம்—இன்னும் சற்று நேரத்தில்!


அப்போது- ஜாக்குக்கு உதவ உடனே ஓடிவந்தான் ஹூக், ரிச்சர்ட் அவனை குறிவைத்து சுட்டான்
ஆவ்...!
ஹூக் கீழே விழுந்தான்...
ஹெலன் ஓடிவா... என்னோடு!
எனக்கு ஒரேகலக்கமாக உள்ளது!
ஹூக் . எப்படி இருக்கி றாய்?பலமான காயமா?
என்னைப்பற்றி கவலைப் படாதீர்கள். அவர்கள் தப்பிவிடாமல் பார்த் துக்கொள்ளுங்கள்!
என்ன இது?



வைரங்கள் அடங்கிய பெட்டியை தூக்கிக் கொண்டு தப்பியோடவா பார்க்கிறாய்!
டுமீல்!
என் பின்னாலேயே வா..ஹேலன்!
உள்ளே-
ரிச்சர்ட்.. உனக்கென்ன பைத்தியமா!
ஹூக்...! உன்னை சாகவிடமாட்டேன்! நகரில் உள்ள டாக்டர்கள் உன்னைக்காப்பாற்றி விடுவார்கள்!
ஹெலிகாப்டரில் ஏறி அதைத் கிளப்ப முயன்று தோற்றுப் போனான் ரிச்சர்ட்...
அந்த சண்டாளன் ஏதோ விஷமம் செய்திருக்கிறான் கிளம்பமாட்டேன் என்கிறது!


அப்பொழுது மாயாவி பாய்ந்தோடி வந்தார்!
ஐயோ!
என்ன ஆயிற்று உனக்கு? எழுந்திரு!
பேயோ பிசாசோ உன் அண்ணனை அறைந்து வீழ்த்தவில்லை... உன் நண்பன் ஜாக்கின கைவரிசைதான் இது!


உங்களுடையசதித்திட்டத்தை முறியடித்து விட்டேன்...
ஜாக் என்னை மன்னித்து விடுங்கள்!
பாசமும், பொருளாசையும் என்புத்தியை தடுமாறச் செய்து விட்டன!
ரிச்சர்ட், ஜாக் இருவரையும் உடனே ஹெலிகாப்டரில் நக ருக்குஎடுத்துச்சென்று டாக்டர் களிடம் காண்பிக்க வேண்டும் ஹெலன்... அந்த வைரங்களை பெட்டியினுள் அள்ளிப் போடு!
அவை லோகோஸ் மக்களுக் குச்சொந்தமானவை!

# நாளும், நடப்பும்!

● நியூயார்க்கில் நாய்களுக்கு ஒரு விடுதி உள்ளது.

● பிரான்ஸ் நாட்டில் ஒரு கிராமத்தின் பெயர் 'Y' நார்வே நாட்டில் உள்ள வேறு ஒரு கிராமத்தின் பெயர் 'A'

● லண்டனின் பார்லிமெண்ட் கட்டிடத்தில் உள்ள பெரிய மணியின் ஓசையை பத்து மைல்களுக்கு அப்பால் இருந்தே கேட்கலாம்!

● பதினைந்து வயதுக்கு முன்னதாகவே பற்களில் ஏதாவது கோளாறு கொண்ட குழந்தைகளின் தொகை 95% என்று சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு உலகசென்ஸஸ் கூறுகிறது.

● புனித மெக்கா நகரில் ஒரு புது விடுதி கட்டப்பட்டது. ஐரோப்பியக் கட்டிடத் தொழிலாளர்கள் இதனைக் கட்டினர் ஆனால் வேலை முடிந்த பின்பு முழுக் கட்டிடத்தையும், அவர்கள் காணமுடியவில்லை. மெக்காவினுள் நுழைய அவர்களுக்குத் தகுதியில்லையாம்!

● உலக அதிசயங்களில் ஒன்றான பைசா நகர சாய்ந்த கோபுரம் அவ்வளவு பெரிய அதிசயம் அல்ல. இங்கிலாந்தில், வேல்ஸ் அருகே உள்ள கிளாமோர்கன் வட்டாரத்தில் சீயர்ஃபில்லிக் கோட்டை உள்ளது. அங்கும் ஒரு சாய்ந்த கோபுரம் இருக்கிறது.

● இத்தாலி நாட்டின் மிலன் நகரத்தில் ஒரு கிறிஸ்தவக் கோயில் உள்ளது. மிகப் பிரம்மாண்டமான கோபுரங்களைக் கொண்ட இந்த ஆலயம் சலவைக் கல்லால் செய்யப் பட்டுள்ளது. இத்தாலியின் இரண்டாவது பெரிய தேவாலயம் இது. இது கட்டிமுடிக்கப்பட்ட ஆண்டு கி. பி. 1965. இதற்கு அடிக்கல் நாட்டப்பட்ட வருடம் கி. பி. 1386! ஆம்! இதனைக் கட்டிமுடிக்க 579 வருடங்கள் ஆயிற்று!



## வித்தியாசங்கள் எத்தனை?



ஒரே மாதிரித் தோற்றமளிக்கும் இந்த இரு படங்களுக்கிடையே ஆறு வித்தியாசங்கள் உள்ளன! கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

1. பார்சலிலுள்ள முடிச்சு, 2. சட்டையிலுள்ள ஜிப். 3. சுவற்றிலுள்ள படம், 4. மரம் குட்டையாக உள்ளது. 5. ஸ்கர்ட் குட்டையாக உள்ளது. 6. பெண்ணின் சட்டை கை.

# பூனைகள் திட்டுகின்றன!



சமீபத்தில், 'மிஹாஷா' என்ற ஒரு பூனை, BBC ரேடியோவில், ஐரோப்பாவிலும், ஆப்பிரிக்காவிலும் உள்ள தனது தோழர்களுக்கு ஒரு சிறு 'மியாவ் கச்சேரி' செய்தது.

இந்த நிகழ்ச்சி நமக்கு விசித்திரமாகத் தோன்றினாலும், சில விஞ்ஞானிகள் இதைத் தங்களது ஆராய்ச்சிகளின் எதிரொலியாகத் தான் கருதுகிறார்கள்! மிருகங்கள் தங்களிடையே பேசிக் கொள்கின்றன என்பதை காலப்போக்கில் தங்களால் நிருபிக்கமுடியுமென அவ்விஞ்ஞானிகள் எண்ணுகின்றனர்.

இவர்களது கணிப்புப்படி, நாயின் குரைப்பை, முயல்கள், பூனைகள், குதிரைகள், மற்றும் மீன்களால் புரிந்து கொள்ள முடியுமாம்!

அதே போல, டால்ஃபின்கள் பேசும்பொழுது (டால்ஃபின்கள் விசில் அடிக்கும்) அருகாமையில் உள்ள பூனையே, குதிரையோ, பன்றியோ உன்னிப்பாய் கவனித்துக் கொண்டிருக்குமாம்!

அரைவேக்காட்டுத்தனமாகத் தோன்றும் இக்கணிப்புகளின் பின், உண்மையில் ஒரு மலையளவு ஆராய்ச்சி அடங்கியுள்ளது. இந்த ஆராய்ச்சிகளின் முடிவெல்லாமே, மிருகங்களிடையே ஒரு பொதுவான 'மொழி' பேசப்படுகின்றது என்பதையே ஊர்ஜிதப் படுத்துகின்றது.

சில ஆராய்ச்சியாளர்கள் பன்றிகளின் உறுமலே, மிருக உலகின் மிக முன்னேறிய மொழிகளில் ஒன்று எனக் கருதுகின்றனர்! பன்றிகளைப் பற்றி விவரமாக ஆராய்ச்சி செய்த சிலர் பன்றி மொழியைப் பற்றி சில விளக்கங்கள் கூறுகிறார்கள்-

பெட்டைப் பன்றி, உச்சஸ்தாயியில் தொடர்ந்து உறுமினால், 'சாப்பிடும் நேரம் வந்து விட்டது குட்டிகளே' எனப் பொருள்படுமாம்- குறைந்த தொனியில் நீளமானதொரு உறுமல், 'பொறுமையாக இருங்கள்' எனப் பொருள்படுமாம், அதே போல சத்தமாக ஒரு முறை உறுமினால், தூங்கும் நேரமாகிவிட்டது குட்டிகளே' எனப் பொருளாம்!

இதே போல பிற மிருகங்களின் பேச்சைப் பற்றியும் ஆராய்ச்சி நடக்கின்றது.

மேற்கு ஜெர்மனியைச் சார்ந்த Dr. Paul Leyhousen. 10 வருடங்களாகப் பூனைகளின் பேச்சைப் பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறார். இதோ அவரது கண்டுபிடிப்புகள், "நாங்கள் பதிவு செய்துள்ள சில பூனைச் சத்தங்கள், பூனை மொழியில் மனிதன் உபயோகிக்கும் கெட்ட வார்த்தைகளுக்கு ஒத்தவை என்பதில் ஐயமில்லை! பூனைகள் அடிபட்டிருந்தாலோ, கோபத்திலும் எரிச்சலிலும் இருக்கும் பொழுதோ, முக்கியமாக நாய்கள் அருகாமையில் இருக்கும் பொழுதோ, இதுபோன்ற 'கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றன!

மனிதனுக்கு அடுத்தபடியாக 'சளச்சள' வெனப் பேசும் உயிரினம், மீன்தான்! சில வருடங்களுக்கு முன்னர் ரஷ்ய விஞ்ஞானிகள், கருங்கடலின் கரையோரத்தில் தங்களது ஆராய்ச்சிகளை நடத்தினர். அதன் மூலம் தெரியவந்தது என்னவென்றால்:-

மீன்கள் தங்கள் பற்களைக் கடித்தோ, செதில்களின் வழியாகக் காற்றை வெளியே ஊதியோ தங்களிடையே பேசிக் கொள்கின்றன. கோல்ட் ஃபிஷ் போன்ற சில மௌனச் சாமியார்கள், இவ்வழியைப் பின்பற்றாமல், தங்கள் வால், செதில் போன்ற அங்கங்களை சங்கேத பாஷையில் அசைத்து தங்களிடையே பேசிக் கொள்ளுமாம்!

விஞ்ஞானிகளின் இன்றைய ஆராய்ச்சியெல்லாம் மிருகங்களுடன் நாமும் பேசுவது எப்படி என்பதில்தான் தீவிரமாக உள்ளது! விரைவில் நாம் பூனைகளுடனும், பன்றிகளுடனும், மீன்களுடனும் சர்ச்சை செய்து கொண்டு அவைகளிடம் விட்டு வாங்க நேர்ந்தாலும் ஆச்சரியப்படுத்துவதற்கில்லை!

இது எப்படி இருக்கு?!

## மூளைக்கு வேலை!

ஒரு பையில் சில கோலி குண்டுகள் இருந்தன. அந்த குண்டுகளில் பாதியையும், ஒரு குண்டையும், ராம் எடுத்துக் கொண்டான். மீதியிருந்த குண்டுகளில் பாதியையும், ஒன்றையும் சோமு எடுத்துக்கொண்டான். மீதியிருந்த ஒரே ஒரு குண்டை, கண்ணன் எடுத்துக்கொண்டான். அப்படியானால், பையில் முதலில் எத்தனை குண்டுகள் இருந்தன?

[விடை: 10]

## அடுத்த இதழ் முதல்...

# துப்பறியும் ஜீனியர்

## புதுமையான சிறுகதைகள்...!

**வழி**




**காட்டுங்கள்!**


வருகிறது
திகில்!
கோடை மலர்!
பாக்கெட் சைஸ்!
இலவச தாய விளையாட்டு இதழுடன்!
வளவளப்பான கண்ணாடி அட்டை!
அற்புதக் கதைக் குவியல்!
ரூ. 5/-



மினி லயன்
தென்னமெரிக்காவில் மாயாவி
ஜூனியர் & மினி லயன்
இணைந்த 2 in 1 இதழ் !
ரூ.
2.50